வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 6.3.2026 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

<u>தலைப்புச் செய்திகள்</u>

- வேளாண்துறை, இந்திய பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவும், நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில், முக்கியத் தூணாகவும் நீடிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.
- தொழிலக பாதுகாப்பு படையினர் இல்லாவிட்டால் நாட்டின் தொழில் வளர்ச்சி சாத்தியமாகாது என்று, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார்.
- இந்தியாவின் உயர்கல்வித் துறையை உலகத் தரத்திற்கு உயர்த்தி சர்வதேச மாணவர்களை ஈர்க்க வேண்டியதன் அவசியத்தை மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு பியூஷ்கோயல் வலியுறுத்தி உள்ளார்.
- காரைக்கால் மாவட்டம் திருநள்ளாறில் இன்று நடைபெற்ற சனிப் பெயர்ச்சி விழாவில் லட்ச கணக்கிலான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

<u>மோடி-கருத்தரங்கு</u>

வேளாண்துறை, இந்திய பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவும், நாட்டின் நீண்டகால வளர்ச்சிப் பயணத்தில், முக்கியத் தூணாகவும் நீடிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். வேளாண்மை மற்றும் கிராமப்புற சீர்திருத்தம் என்பது குறித்து இன்று நடைபெற்ற, பட்ஜெட்டிற்கு பிந்தைய இணைய வழி கருத்தரங்கில் காணொளி காட்சி மூலம் அவர் பேசுகையில், வேளாண் துறையை வலுப்படுத்த அரசு தொடர்ச்சியாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும்

இவ்வாண்டு மத்திய பட்ஜெட்டில் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிப் பணிகளுக்கு அதிக முக்கியத் துவம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். தற்போது நாட்டில், உணவு தானியங்கள், பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி சாதனை அளவில் அதிகரித்து இருப்பதாக அவர் தெரிவித்தார். பிரதமரின் உரை குறித்து கூடுதல் விவரங்கள்…….

ரசாயனங்கள் இல்லாத, ஏற்றுமதி நோக்குடன் கூடிய இயற்கை விவசாயத்தை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை பிரதமர் வலியுறுத்தினார். பி-எம் கிசான் திட்டத்தின் கீழ் நாட்டில் இதுவரை 10 கோடி விவசாயிகளுக்கு 4 லட்சம் கோடி ரூபாய் வழங்கப் பட்டுள்ளதாகவும், பிரதமர் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் விவசாயிகள் இதுவரை 2 லட்சம் கோடி ரூபாய் காப்பீட்டுத் தொகை பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார். நாட்டில் இதுவரை 9 கோடி விவசாயிகளுக்கு டிஜிட்டல் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளதாகவும் இ-நாம் இணையவழி சந்தை மூலம் விவசாயிகளுக்கான சந்தை வாய்ப்புகள் அதிகரித்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமரின் வீட்டு வசதி திட்டம், கிராமப்புற சாலைகள் திட்டம், ஸ்வாமித்வா திட்டம் மற்றும் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான அரசின் உதவிகளால், கிராமப்புற பொருளாதாரம் தொடர்ச்சியான முறையில் வலுவடைந்து வருவதாக பிரதமர் தெரிவித்தார். நாட்டில் 3 கோடி பெண்களை லட்சாதிபதி சகோதரிகளாக மேம்படுத்தும் இலக்கு ஏற்கனவே எட்டப்பட்டதைத் தொடர்ந்து, 2029-ஆம் ஆண்டிற்குள் இந்த எண்ணிக்கையை மேலும் 3 கோடி அதிகரிக்க புதிய இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பட்ஜெட்டிற்கு பிந்தைய, இந்த இணையவழி கருத்தரங்கில், உயர் மதிப்பு வேளாண் பொருட்களின் உற்பத்தி, கால்நடை பராமரிப்பு, அம்ரித் சரோவர் உள்ளிட்ட நீர் நிலைகளில் ஒருங்கிணைந்த மீன்வள மேம்பாடு,

கிராமப்புற பெண் தொழில் முனைவோரின் உற்பத்தி பொருட்களுக்கு கூடுதல் சந்தை வாய்ப்புகள் உட்பட, வேளாண்மை மற்றும் கிராமப்புற வளர்ச்சி தொடர்பான பல்வேறு அம்சங்கள் குறித்து, விரிவாக விவாதிக்கப்பட்டது.

பட்ஜெட்-கருத்தரங்கம்

இவ்வாண்டு மத்திய பட்ஜெட்டில், வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த துறைகளை மேம்படுத்த வலுவான அடித்தளம் அமைக்கப் பட்டுள்ளதாக மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் டாக்டர் சந்திரசேகர் பெம்மசாமி கூறி உள்ளார். வேளாண்மை மற்றும் கிராமப்புற வளம் குறித்த இணைய வழி கருத்தரங்கில் பிரதமர் திரு நரேந்திர மோடி ஆற்றிய உரையை அவர் சுட்டிக்காட்டி, இத்துறைகளில் வாய்ப்புகளை அதிகரிப்பதன் மூலம் முன்னேறிய இந்தியா என்னும் இலக்கை எட்ட அரசு உறுதி பூண்டுள்ளதாக தெரிவித்தார். ஏற்றுமதி நோக்குடன் கூடிய வேளாண்மைக்கும், வேளாண் பொருட்களின் தரம், மதிப்புக் கூட்டல் மற்றும் போட்டித் திறன் மேம்பாட்டிற்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி மிகுந்த முக்கியத் துவம் அளிப்பதாக அமைச்சர் கூறினார். இதனால் இந்திய விவசாயிகள் மற்றும் வேளாண் தொழில் முனைவோருக்கு வாய்ப்புகள் அதிகரித்து நாட்டின் வேளாண் பொருளாதாரம் மேம்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ராஜ்நாத்

நிச்சயமற்ற சூழல் அதிகம் உள்ள நடப்பு யுகத்தில் நாடு எதையும் சந்திக்க சுயசார்பு மட்டுமே வழி என்று பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறி உள்ளார். கடல்சார் துறையில் இந்தியாவின் பாரம்பரிய புகழை மீட்டெடுப்பது குறித்து கொல்கத்தாவில் நடைபெறும், சாகர் சங்கல்ப்

பேச்சு வார்த்தை மாநாட்டில் அவர் பேசுகையில் தற்போது உலக அளவிலான பொருள் விநியோக சங்கிலியில் பெரும் மாற்றங்களும், உலக நாடுகளின் சக்தி குறித்து புதிய சமன்பாடுகளும் ஏற்பட்டு, கடல்சார் செயல்பாடுகளும் தொடர்ச்சியாக அதிகரித்து வருவதால் நாடு ஒவ்வொரு துறையிலும் சுயசார்பை எட்டுதல் அவசியம் என்றார்.

## அமித் ஷா

மத்திய தொழிலக பாதுகாப்பு படையினர் இல்லாவிட்டால் நாட்டின் தொழில் வளர்ச்சி சாத்தியமாகாது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார். இன்று கட்டாக் அருகே முண்டொலியில் தொழிலக பாதுகாப்பு படையின் 57-ஆவது நிறுவன நாள் விழாவில் உரையாற்றிய அவர் நாட்டின் முக்கிய உற்பத்தி ஆலைகளுக்கு பாதுகாப்பளிக்கும் சிஐஎஸ்எப் படையினரிடம், முக்கிய கடல்சார் அமைப்புகளை பாதுகாக்கும் பொறுப்பும், விரைவில் ஒப்படைக்கப்படும் என்றார். நடப்பு மார்ச் மாதத்திற்கு உள்ளாகவே இந்தியா, நக்சல் வாதம் இல்லாத நாடாக மேம்படும் என்று உள்துறை அமைச்சர் கூறினார். இந்த இலக்கை எட்டுவதிலும் தொழிலக பாதுகாப்பு படையினரின் பங்கு முக்கியமானது என்றும் அவர் பாராட்டினார். திரு அமித் ஷா இன்று புவனேஸ்வரில் 3 ஆயிரத்து 275 கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு திட்டங்களை தொடக்கி வைத்து வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

## உயர்கல்வி

இந்தியாவின் உயர்கல்வித் துறையை உலகத் தரத்திற்கு உயர்த்தி சர்வதேச அளவில் மாணவர்களை ஈர்க்க வேண்டியதன் அவசியத்தை மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு பியூஷ்கோயல் வலியுறுத்தி உள்ளார். இன்று புதுடெல்லியில் பல்கலைக்கழக துணைவேந்தர் மாநாட்டில் உரையாற்றிய அவர் தற்போது உலகின் மொத்த பொருளாதார வளர்ச்சியில் இந்தியா 20 சதவிகிதம் பங்களிப்பதால், வளரும் நாடுகளைச் சேர்ந்த இளைஞர்கள் இந்தியாவில் உயர்கல்வி பயில்வதை ஊக்குவிக்க இதுவே சரியான தருணம் என்றார். விரிவான விவாதங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட 2020-ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கையில் கல்வித் துறையில் சர்வதேச தரத்தை எட்ட முக்கியத் துவம் அளிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். இதற்கு ஏற்ப பல்கலைக்கழகங்கள் தங்களின் பாடத் திட்டத்தை நவீனப்படுத்த வேண்டும் என்றும் செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் கணினி போன்ற புதிய துறைகள் பாடத் திட்டத்தில் இடம் பெற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

## திருநள்ளாறு

காரைக்கால் மாவட்டம் திருநள்ளாறில் உள்ள, உலகப் புகழ் பெற்ற தர்பாரண்யேஸ்வரர் திருக்கோவிலில், சனிபகவான் கும்ப ராசியில் இருந்து மீன ராசிக்கு பிரவேசிக்கும் சனிப் பெயர்ச்சி விழா இன்று வெகு விமர்சையாக நடைபெற்றது. வாக்கிய பஞ்சாங்கத்தின் படி காலை மணி 8.24-க்கு நிகழ்ந்த இந்த ஆன்மிக நிகழ்வான சனிப்பெயர்ச்சியை காண, தமிழ்நாடு,புதுச்சேரி மற்றும் நாட்டின் பல்வேறு மாநிலங்களில் இருந்து லட்ச சணக்கான பக்தர்கள் திருநள்ளாற்றில் குவிந்தனர். சனி பெயர்ச்சி விழா குறித்து ஒரு செய்தி தொகுப்பு.........

திருநள்ளாறு சனிப்பெயர்ச்சி விழாவின் முக்கிய நிகழ்வாக, சனி பகவானுக்கு, பால், தயிர், சந்தனம் உள்ளிட்ட திரவியங்களால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு, மகா தீபாராதனை காட்டப்பட்டது. தர்மபுரி ஆதினம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசி ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், மாவட்ட ஆட்சியர் இஷிதா ராட்டி உட்பட பலர் இதில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். சனிப் பெயர்ச்சி திருவிழாவை ஒட்டி, பக்தர்களின் வசதிக்காக தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் சார்பில், பல்வேறு பகுதிகளில் இருந்து சிறப்பு பேருந்துகளும், காரைக்கால் உள்ளூர் பகுதிகளில் 20 பேருந்துகளும் இயக்கப்பட்டன. ஆயிரத்திற்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். சிசிடிவி கேமராக்கள் மூலம் காரைக்கால் நகரம் முழுவதும் தீவிர கண்காணிப்பு வளையத்திற்குள் வைக்கப்பட்டு இருந்தது. பக்தர்கள் தரிசனம் செய்ய ஏதுவாக இன்று நாள் முழுவதும் கோவில் நடை திறந்திருக்கும் என்றும் தர்பாரண்யேஸ்வரர் கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

<u>புதுச்சேரி-சோடங்கர் (8)</u>

புதுச்சேரி சட்டமன்ற தேர்தலுக்கான தொகுதி பங்கீடு குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் திரு வைத்திலிங்கம் தலைமையிலான 7 உறுப்பினர் காங்கிரஸ் குழு, திமுக-வுடன் பேச்சு வார்த்தை நடத்தும் என காங்கிரஸ் மேலிட பார்வையாளர் திரு சோடங்கர் கூறி உள்ளார். தேர்தலை எதிர்கொள்வது குறித்து இன்று புதுச்சேரியில், மாநில காங்கிரஸ் நிர்வாகிகளுடன் ஆலோசனை மேற்கொண்ட அவர் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். புதுச்சேரி காங்கிரஸ் தலைமையிலும் தமிழகத்தில் திமுக தலைமையிலும் கூட்டணி செயல்படும் என அவர் தெரிவித்தார்.

கள்ளக்குறிச்சி

கள்ளக்குறிச்சி மாவட்டம் வேளாண் அறிவியல் நிலையத்தில் இன்று நடைபெற்ற சர்வதேச மகளிர் தின விழாவில் 74 பெண்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். விழாவின் ஒரு பகுதியாக பண்ணைக் கழிவுகளை பயன் உள்ள வளங்களாக மாற்றுவது குறித்து மகளிர் சுய உதவிக் குழுவினர் 50 பேருக்கு, திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டது. கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் வேளாண்மை, தோட்டக் கலை, கால்நடை வளர்ப்பு, சிறுதானிய உற்பத்தி மற்றும் மதிப்புக் கூட்டுதல் பணிகளில் சிறந்து விளங்கும் 11 பெண்கள், விழாவில் பாராட்டி கவுரவிக்கப்பட்டனர். தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக் கழகத்தின் பொறுப்பு துணை வேந்தர் டாக்டர் நரேந்திர பாபு, விரிவாக்க கல்வி இயக்குநர் டாக்டர் செல்வராஜ் ஆகியோர் காணொளி வாயிலாக இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

வானிலை

இன்றும், நாளையும் கோவை நீலகிரி மாவட்டங்களில் லேசான மழை இருக்கலாம் என்றாலும் தமிழகத்தின் இதர பகுதிகள் மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலையே நிலவும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. காரைக்கால் பகுதியில் வரும் 9-10 ஆகிய தேதிகளில் லேசான மழை பெய்யக் கூடும் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே. கடந்த 24 மணி நேரத்தில், கொடைக்கானலில், 9 டிகிரி செல்சியஸ் குறைந்த பட்ச வெப்பநிலை பதிவாகி உள்ளது.

கேலோ இண்டியா

கேலோ இண்டியா பழங்குடி விளையாட்டுப் போட்டிகள் சட்டீஸ்கரில் வரும் 26-ஆம் தேதி முதல், ஏப்ரல் 6-ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. நாட்டில் முதல் முறையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த பழங்குடி விளையாட்டுப் போட்டிகள் ராய்ப்பூர், ஜக்தல்பூர், சர்குஜா,

ஆகிய இடங்களில் நடைபெறும் என மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார். விளையாட்டுத் துறையில் ஈடுபட விரும்பும் ஒவ்வொரு இளைஞருக்கும் போதிய வாய்ப்புகளை உருவாக்கி தருவதற்கான அரசின் முயற்சிகளில் மேலும் ஒரு பகுதி, இது என்றும், முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்துவதில், பழங்குடி பகுதிகளின் விளையாட்டு திறன்களுக்கு முக்கிய இடம் இருக்கும் என்றும் அமைச்சர் கூறி உள்ளார்.

## பேட்மிண்டன்

ஆல் இங்லேண்ட் ஓப்பன் பேட்மிண்டன் சேம்பியன் பட்டப் போட்டிகளின் ஆட்வர் ஒற்றையர் பிரிவில், இந்தியாவின் லக் ஷயா சென், இன்று இரவு, சீன வீரர் லி-ஷி-ஃபெங்குடன், காலிறுதிப் போட்டியில் மோதுகிறார். பெர்மிங்ஹாமில் நேற்று நடைபெற்ற போட்டியில் அவர் லக் ஷயா வெற்றி பெற்று, காலிறுதி போட்டிக்கு தகுதிப் பெற்றார்.